# சிந்தையைக் கவரும் சிலப்பதிகாரம்

8

சிலப்பதிகாரம் 'பத்தினி தெய்யோ' என்று அழைக்கப்படுகின்ற கண்ணகியின் கதையைக் கூறும் இலக்கியமாகும். அதனை ஆக்கியவர் சேர நாட்டு இளவரசர் இளங்கோ ஆவார். இவர் தன் அண்ணன் செங்குட்டுவனுக்காக அரச வாழ்க்கையைத் துறந்து, துறவு வாழ்க்கையைப் பூண்டார். இதனால் இவரை ' இளங்கோ அடிகள்' என்று அழைப்பர்.

கண்ணகியின் கதை நாடறிந்த கதையாகும். சோழநாட்டின் பூம்புகார்ப் பட்டினத்திலே செல்வப் பெருங்குடியில் பிறந்து வளர்ந்தவள் கண்ணகி. அவள் கோவலன் என்னும் செல்வ வணிகனைத் திருமணம் செய்து மகிழ்ச்சியாக இல்லற வாழ்க்கையை வாழ்ந்து வந்தாள். சில காலம் செல்ல, கோவலன் மாதவி என்னும் நாட்டிய மங்கைமீது ஆசை கொண்டான். தினமும் அவளின் ஆடல் பாடலில் மயங்கினான். வீட்டை மறந்தான். கண்ணகியோ அவன் வேண்டும் போதெல்லாம் மறுக்காமல் செல்வத்தை எடுத்துக் கொடுத்தாள். இதனால் கோவலன் தனது செல்வம் முழுவதையும் இழந்தான். பொருள் இல்லாதபடியால் மாதவியிடம் போக அவனால் முடியாமல் போனது. அப்போதுதான் கோவலன் தன் நிலை அறிந்தான். தன் அன்பு மனைவி கண்ணகியின் பெருமையை உணர்ந்தான். பொருள் சம்பாதிப்பதற்காகக் கண்ணகியுடன் பூம்புகார்ப் பட்டினத்தை விட்டு மதுரைக்குப் போனான். அங்கு மனைவியுடன் புது வாழ்க்கையை வாழ ஆசைப்பட்டான். கண்ணகியோ கலங்காமல் தன் காற்சிலம்பைக் கழற்றிக் கோவலனிடம் கொடுத்தாள்.





இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

கண்ணகியின் காற்சிலம்பை விற்பதற்காகச் சென்ற கோவலனை அரண்மனைக் காவலர்கள் பிடித்துக் கொண்டார்கள். மகாராணி பாண்டிமாதேவியின் சிலம்பைத் திருடிய கள்வன் எனக் கோவலனைக் குற்றம் சாட்டினார்கள். தீர விசாரிக்காத மன்னனின் தீர்ப்பினால் காவலர்கள் கோவலனைக் கொன்றனர். கணவன் கொலை செய்யப்பட்டதைக் கேள்வியுற்ற கண்ணகி கொதித்தெழுந்தாள். பாண்டிய மன்னன் முன்னே சென்றாள். மன்னன் சபையின் முன்னே தன் மற்றைய காற்சிலம்பை உடைத்தாள். தன் கணவன் குற்றவாளியல்லன் என்று நிருபித்தாள். கண்ணகியின் சீற்றத்தால் பாண்டிய மன்னன் வீழ்ந்து மடிந்தான். மன்னன் மடிந்ததைக் கண்ட மகாராணியும் உடன் இறந்தாள். மதுரை நகரமும் கண்ணகியின் கற்பின் கனலினால் எரிந்து சாம்பலானது. மலைமேலேறி வேங்கை மரத்தின் கீழ் நின்றாள். விண்ணிலிருந்து இறங்கிய விமானம் மூலம் விண்ணுலகம் சென்றாள்.



கண்ணகியின் இந்தக் கதையை இளங்கோ அடிகள் அறிந்தார். அழகு தமிழில் சிலப்பதிகாரம் என்னும் பெருங் காப்பியமாகப் பாடினார். சிலப்பதிகாரம் கற்போர் மனத்தை அள்ளும் திறம் வாய்ந்தது. இதனால் கண்ணகியின் பெருமை நாடுகள் எங்கும் பரவியது. பாண்டியமன்னன் வட நாடு சென்று கனகவிசயர் தலையிற் கல்லேற்றி வந்தான் என்றும் அக்கல்லினாற் கண்ணகிக்குச் சிலை செய்து கோயிலெடுத்தான் என்றும் வரலாறு கூறுகிறது. கண்ணகியின் பெருமையை இலங்கையின் கஜபாகு மன்னன் அறிந்தான். ‘பத்தினி தெய்யோ’ என்று கண்ணகிக்குக் கோயில் கட்டி வழிபட வகை செய்தான். நாடும் வளம் சிறக்கப்பெற்றது. சிலப்பதிகார காவியமே இதனைக் குறிப்பிடுகிறது. சிலப்பதிகாரம் கண்ணகியின் கதை வழியாக மூன்று உண்மைகளைக் கூறுகின்றது.

(i) நீதி தவறிய அரசரை அறமே கொல்லும்

(ii) கற்புடைய பெண்களை விண்ணும் மண்ணும் போற்றும்

(iii) உண்மை விதிவினையின் பயன் விளைந்தே தீரும் என்பன

இவை எக்காலத்துக்கும் பொருந்தும் உண்மைகளாகும். நாமும்



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தைப் படித்து இன்புறுவோமாக.

**அரும்பதங்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| ஈராயிரம் | - | இரண்டாயிரம் | - | දෙදහක් |
| ஆண்டு | - | வருடம் | - | වර්ෂය |
| வேந்தர் | - | அரசர் / மன்னன் | - | රජතුමා |
| வணிகன் | - | வியாபாரி | - | වෙළෙඳ |
| இல்லறம் | - | குடும்ப வாழ்க்கை | - | පවුල් ජීවිතය |
| பட்டிணம் | - | நகரம் | - | නගරය |
| அரண்மனை | - | அரசர் வாழும் இடம் | - | මාලිගාව |
| மகாராணி | - | அரசி | - | රැජින |
| அவை | - | சபை | - | සභාව |
| சீற்றம் | - | கோபம் | - | තරහ/කෝපය |
| அறம் | - | தர்மம் | - | ධර්මය |
| விண் | - | வானம் | - | අහස |

**கிரகித்தற் பயிற்சி**

பின்வரும் வினாக்களுக்கு விடை கூறுக.

පහත සඳහන් ප්‍රශ්නවලට පිළිතුරු සපයන්න.

1) சிலப்பதிகாரத்தை ஆக்கிய புலவர் யார்?
2) கண்ணகியைச் சிங்கள மக்கள் எப்படி அழைக்கிறார்கள்?
3) சேர நாட்டு இளவரசர் யார்?
4) சிலப்பதிகாரம் யாருடைய கதையைக் கூறுகின்றது?
5) கோவலன் தனது செல்வம் முழுவதையும் எப்படி இழந்தான்?
6) கண்ணகி தனது மற்றைய காற்சிலம்பை ஏன் உடைத்தாள்.

## செயற்பாடு I

**பின்வரும் கூற்றுகள் சரியாயின் ''சரி'' எனவும், பிழையாயின் 'பிழை' எனவும் புள்ளிக் கோட்டில் எழுதுக.**
**පහත සඳහන් වාක්‍ය නිවැරදි නම් "√" ලකුණ ද වැරදි නම් "× " ලකුණ ද වරහන් තුළ ලියන්න.**

(அ) உலகில் உள்ள பழைமை வாய்ந்த மொழிகளுள்



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

தமிழ் மொழியும் ஒன்றாகும். (-------------------)

(ஆ) மூவேந்தர்கள் தமிழ்மொழியை வளர்க்கவில்லை. (--------)

(இ) கண்ணகி கோவலனை மணந்தாள். (--------)

(ஈ) சிலப்பதிகாரத்தைப் பாண்டிய மன்னன் இயற்றினான்.(--------)

(உ) கோவலன் வணிகம் செய்ய மதுரைக்குச் சென்றான்.(--------)

## செயற்பாடு II

சிந்தை கவரும் சிலப்பதிகாரம் என்ற கதையினை உச்சரிப்புத் தெளிவுடன் உரத்து வாசித்துப் பழகுக.

## செயற்பாடு III

சென்றான், கொடுத்தான், போனான், கோவலன், மாதவி, அரசன், புலவன், அரசி, மன்னன், கண்ணகி, இளவரசன், அண்ணன், இளங்கோ, அவள், அவன், மனைவி, மகாராணி, கணவன், தேவி, கள்வன், காவலன், சென்றாள், உணர்ந்தான், போனாள், இழந்தான், கஜபாகு

**மேலே உள்ள சொற்களில் ஆண்பால் சொற்களை வேறாகவும் பெண்பால் சொற்களை வேறாகவும் பட்டியல் படுத்துங்கள்.**

ඉහත සඳහන් වචනවල පුරුෂ ලිංග පද හා ස්ත්‍රී ලිංග පද වෙන් වෙන් වශයෙන් වර්ග කරන්න.

| ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக